வணிகக்கல்வி

வியாபாரச் சங்கங்கள், வியாபார ஒப்பந்தங்கள், அமைப்புக்கள்



e-தக்ஷலாவ கல்விக்கூடம்™
The National e-learning Portal for The General Education
Start Your Learning Journey with e-thaksalawa

வியாபாரச் சங்கங்கள், வியாபாரக் கூட்டுக்கள் (Trade Blocks)

ஒரு

சில நாடுகள் ஒன்றிணைந்த வரி, சுங்க வரி மற்றும் வியாபாரம் தொடர்பான ஒப்பந்தமொன்றை உருவாக்குதல் வியாபாரக் கூட்டுக்கள் எனப்படும்.

வியாபார வலயங்களுக்கு உதாரணமாக பின்வருவனவற்றைக் குறிப்பிட முடியும்

⇒ ஐரோப்பிய சங்கம் (EU)

⇒ ஆசியான் அமைப்பு (ASEAN)

⇒ 8 நாடுகளின் குழு (G8)

ஐரோப்பிய சங்கம் (European Union) (EU)

ஐரோப்பாவில் அமைந்துள்ள 26 நாடுகள் தமது பிராந்திய, பொருளாதார, சமூக, அரசியல், கலாச்சார விருத்தி கருதி உருவாக்கியுள்ள அமைப்பு இதுவாகும். 1957 இல் ஆறு ஐரோப்பிய நாடுகளினால் கையொப்பமிடப்பட்டு ஒப்பந்தம் ஒன்றினூடாக இது ஆரம்பிக்கப்பட்டது

இதன் அங்கத்துவ நாடுகள் பொதுவான வியாபார ஒப்பந்தம், விவசாய மற்றும் மீன்பிடிக் கொள்கை, பிரதேச அபிவிருத்தி கொள்கை என்பவற்றை நடைமுறைப்படுத்தி வருவதுடன் 1999 இல் EU இன்

EU அங்கத்துவ நாடுகள்

- ஒஸ்ரியா
- செக் குடியரசு
- இத்தாலி
- மோல்டா
- ரூமேனியா
- சுவீடன்
- பெல்ஜியம்
- டென்மார்க்
- லிதுவேனியா
- நெதர்லாந்து
- பல்கேரியா
- எஸ்டோனியா
- லத்வியா
- போலந்து
- சோல்வேனியா
- சைப்பிரஸ்
- அயர்லாந்து
- லக்சம்பேர்க்
- போர்த்துக்கல்
- ஸ்பெயின்
- பின்லாந்து
- பிரான்ஸ்
- ஜேர்மன்
- கிரீஸ்
- ஹங்கேரி
- சிலோவோக்கியா
- கொறற்ரியா

தொகுப்பு : திருமதி அம்பிகை தர்ஷினி நஞ்சன், ஆசிரிய ஆலோசகர் - வணிகக்கல்வி (மாகாண கல்வித் திணைக்களம், வடமாகாணம்)

கணினி வடிவமைப்பு : திரு.க.குகதாசன் ஆசிரியர் - த.தொ.தொ (கிளி/புனித பற்றிமா றோ.க.த.க பாடசாலை, உருத்திரபுரம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

EU அங்கத்துவ நாடுகளின் வரைபடம்



தென் கிழக்காசிய நாடுகளின் சங்கம் (ஆசியான் அமைப்பு)

Association of South East Asian Nations (ASEAN)

தென் கிழக்கு ஆசியாவின் பத்து நாடுகளால் அரசியல், பொருளாதார, சமூக, நல விருத்தி கருதி உருவாக்கப்பட்டுள்ள அமைப்பு இதுவாகும். இது 1961 இல் பிலிப்பைன்ஸ், மலேசியா, தாய்லாந்து போன்ற மூன்று நாடுகள் ஒன்றிணைந்து முதலில் ஆரம்பிக்கப்பட்டது

ஆசியான் (ASEAN) அங்கத்துவ நாடுகள்

- பிலிப்பைன்ஸ்
- இந்தோனேசியா
- வியட்னாம்
- காம்பூச்சியா
- மலேசியா
- சிங்கப்பூர்
- லாவோஸ்
- தாய்லாந்து
- புரூணை
- மியன்மார்

தொகுப்பு : திருமதி அம்பிகை தர்ஷினி நஞ்சன், ஆசிரிய ஆலோசகர் - வணிகக்கல்வி (மாகாண கல்வித் திணைக்களம், வடமாகாணம்)

கணினி வடிவமைப்பு : திரு.க.குகதாசன் ஆசிரியர் - த.தொ.தொ (கிளி/புனித பற்றிமா றோ.க.த.க பாடசாலை, உருத்திரபுரம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

எட்டு நாடுகளின் குழு (Group of Eight) G8

உலகிலுள்ள பிரதானமான 8 நாடுகள் ஒன்றிணைந்து அமைத்துள்ள வியாபாரக் கூட்டு இதுவாகும். 1973 இல் உருவான எரிபொருள் தொடர்பான பிரச்சினை, பூகோள ரீதியில் உருவான மந்தநிலை என்பன இக் கூட்டு உருவாகுவதற்கு செல்வாக்கு செலுத்திய காரணிகள் ஆகும்.

G8 இன் அங்கத்துவ நாடுகள்

- ஐக்கிய அமெரிக்க குடியரசு (USA)
- ஐக்கிய இராச்சியம் (UK)
- இத்தாலி
- பிரான்ஸ்
- மேற்கு ஜேர்மன்
- கனடா
- ஜப்பான்
- ரஸ்யா

Note

G8 அமைப்பில் இருந்து ரஸ்யா தற்போது விலகியுள்ளது

வியாபார ஒப்பந்தம்

இரு நாடுகள் அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகள் குறிப்பிட்ட காலப்பகுதியொன்றினுள் வியாபாரப் பொருட்களை பரிமாற்றிக் கொள்வதற்காக ஏற்படுத்திக் கொள்ளப்படும் உடன்பாடு **வியாபார ஒப்பந்தம்** எனப்படும்.

இரு நாடுகளுக்கு இடையில் ஏற்படுத்திக் கொள்ளப்படும் ஒப்பந்தம் **இருபக்க ஒப்பந்தம்** எனவும், பல நாடுகளுக்கிடையே ஏற்படுத்திக் கொள்ளப்படும் ஒப்பந்தம் **பல்பக்க ஒப்பந்தம்** எனவும் குறிப்பிடப்படும்

உதாரணம்

1) வடஅமெரிக்கா சுதந்திர வியாபார ஒப்பந்தம் (NAFTA)

2) தெற்காசிய சுதந்திர வியாபார வலயம் (SAFTA)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

தொகுப்பு : திருமதி அம்பிகை தர்ஷினி நஞ்சன், ஆசிரிய ஆலோசகர் - வணிகக்கல்வி (மாகாண கல்வித் திணைக்களம், வடமாகாணம்)

கணினி வடிவமைப்பு : திரு.க.குகதாசன் ஆசிரியர் - த.தொ.தொ (கிளி/புனித பற்றிமா றோ.க.த.க பாடசாலை, உருத்திரபுரம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

வடஅமெரிக்க சுதந்திர வியாபார ஒப்பந்தம்

North American Free Trade Agreement (NAFTA)

வட அமெரிக்க நாடுகளான ஐக்கிய அமெரிக்க குடியரசு, கனடா, மெக்ஸிக்கோ போன்ற மூன்று நாடுகள் இணைந்து 1994 ஆம் ஆண்டு ஜனவரி 1ம் திகதி உருவாக்கப்பட்ட சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் முக்கிய நோக்கங்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. மூன்று நாடுகளுக்கு இடையிலான வியாபாரத் தடைகளை அகற்றுதல்
2. தீர்வை வரிகளை அகற்றுதல்
3. ஊழியர்களை பரிமாற்றிக் கொள்ளுதல்

◊ மூன்று நாடுகளினதும் உற்பத்திப் பொருட்கள் மாத்திரம் இவ் ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளமை இவ் ஒப்பந்தத்தின் விசேட பண்பாகும்

◊ ஏனைய நாடுகளில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் இம் மூன்று நாடுகளிடையே பரிமாற்றப்படும் போது சுங்கவரி அமுல்படுத்தப்படும்

◊ ஐக்கிய அமெரிக்கக் குடியரசில் உற்பத்தி செய்யப்பட்டவை (mmade in USA), கனடாவில் உற்பத்தி செய்யப்பட்டவை (made in Canada) அல்லது மெக்ஸிக்கோவில் உற்பத்தி செய்யப்பட்டவை (made in Maxico) எனக் குறிப்பிடப்பட்டுள்ள உற்பத்தி பொருட்களுக்கு மட்டுமே சுங்க வரியிலிருந்து

தெற்காசிய சுதந்திர வியாபார வலயம்

South Asian Free Trade Area (SAFTA)

சார்க் வலய நாடுகளுக்கிடையில் பின்வரும் நோக்கங்களை அடையும் நோக்குடன் இவ் அமைப்பு உருவாக்கப்பட்டது

1. சார்க் வலய நாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்பினை விரிவுபடுத்தல்
2. தெற்காசிய நாடுகளினுள் சுதந்திர வியாபார பிரதேசமொன்றை உருவாக்குதல்
3. சார்க் வலய நாடுகளின் பொருளாதார முறைமையினை பூகோளமயப்படுத்தல்

2004ம் ஆண்டில் இஸ்லாமாபாத்தில் இடம்பெற்ற 12ஆவது **SAARC** மாநாட்டின் போது இவ்வொப்பந்தம் கையொப்பமிடப்பட்டது.

இவ்வொப்பந்தம் நடைமுறைக்கு வந்த பின்னர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடப்பட்ட நாடுகளிடையே எவ்வித தடைகளுமின்றி

⇒ சுங்க வரியினை நீக்குதல்

⇒ துறைமுக மற்றும் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்

⇒ வியாபாரத்துடன் தொடர்புடைய சேவைகளை வழங்குதல்

என்பன தொடர்பான பொதுவான உடன்பாடொன்று ஏற்படுத்திக் கொள்ளப்பட்டது

தொகுப்பு : திருமதி அம்பிகை தர்ஷினி றஞ்சன், ஆசிரிய ஆலோசகர் - வணிகக்கல்வி (மாகாண கல்வித் திணைக்களம், வடமாகாணம்)

கணினி வடிவமைப்பு : திரு.க.குகதாசன் ஆசிரியர் - த.தொ.தொ (கிளி/புனித பற்றிமா றோ.க.த.க பாடசாலை, உருத்திரபுரம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

ஆசிய பசுபிக் வியாபார ஒப்பந்தம்
Asia-Pacific Trade Agreement (APTA)

1975ம் ஆண்டில் பாங்கொக் ஒப்பந்தம் எனும் பெயரில் ஆரம்பிக்கப்பட்ட இவ் ஒப்பந்தமானது 2005 நவம்பர் 02ம் திகதியிலிருந்து ஆசிய பசுபிக் வியாபார ஒப்பந்தம் என பெயரிடப்பட்டது.

இதன் அங்கத்துவ நாடுகளாவன

- பங்களாதேஷ்
- இந்தியா
- இலங்கை
- சீனா
- லாவோஸ்
- தென் கொரியா
- மொன்கோலியா

⇒ ஆசிய பசுபிக் வலயத்திலுள்ள மிகப் பழைய முன்னனி வியாபார ஒப்பந்தம் இதுவாகும்

⇒ பிரதான நோக்கம்

அங்கத்துவமற்ற நாடுகளிலிருந்து பொருட்கள், சேவைகளை இறக்குமதி செய்வதை விட இலகுவான முறையில் அங்கத்துவ நாடுகளில் இருந்து பொருட்கள் சேவைகளை இறக்குமதி செய்யக் கூடியவாறு வியாபாரத் தடைகளை இயலுமான வரையில் குறைத்து அங்கத்துவ நாடுகளிடையே பொருளாதார அபிவிருத்தியினை விரைவுபடுத்துவது.

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

தொகுப்பு : திருமதி அம்பிகை தர்ஷினி நஞ்சன், ஆசிரிய ஆலோசகர் - வணிகக்கல்வி (மாகாண கல்வித் திணைக்களம், வடமாகாணம்)

கணினி வடிவமைப்பு : திரு.க.குகதாசன் ஆசிரியர் - த.தொ.தொ (கிளி/புனித பற்றிமா றோ.க.த.க பாடசாலை, உருத்திரபுரம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

சர்வதேச அமைப்புக்கள்

வெளிநாட்டு வியாபாரத்திற்கு எதிரான தீர்வைகள், செலாவாணிக் கட்டுப்பாட்டுச் சட்டதிட்டங்கள், சுங்க சட்ட திட்டங்கள் போன்ற தடைகளைக் குறைப்பதற்காக உருவாக்கப்பட்டிருக்கும் அமைப்புக்கள்



உலக வியாபார அமைப்பு

சர்வதேச வியாபாரத்தை இலகுபடுத்துவதற்காகவும் மேற்பார்வை செய்வதற்காகவும் 1995ம் ஆண்டு Janauary 01 இல் ஆரம்பிக்கப்பட்ட அமைப்பு இதுவாகும். இதன் தலைமையகம் சுவிற்ஸ்லாந்தின் ஜெனிவா நகரில் அமைந்துள்ளது

நிறுவனத்தின் பிரதான இலக்குகள்/ நோக்கம்

⇒ பூகோளரீதியில் நாடுகளுக்கிடையே வியாபாரச்சட்ட திட்டங்களுக்கமைவாக செயற்படுதல்

⇒ வியாபாரத்தின் மேம்பாட்டிற்காக நாடுகளுக்கிடையில் கலந்துரையாடல்களை நடாத்துவதற்குச் சந்தர்பத்தைக் பெற்றுக் கொடுத்தல்

⇒ நாடுகளுக்கிடையே வியாபாரத் தடைகளை குறைத்தல்

தொகுப்பு : திருமதி அம்பிகை தர்ஷினி றஞ்சன், ஆசிரிய ஆலோசகர் - வணிகக்கல்வி (மாகாண கல்வித் திணைக்களம், வடமாகாணம்)

கணினி வடிவமைப்பு : திரு.க.குகதாசன் ஆசிரியர் - த.தொ.தொ (கிளி/புனித பற்றிமா றோ.க.த.க பாடசாலை, உருத்திரபுரம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

தெற்காசிய வலய நாடுகளின் ஒத்துழைப்பிற்கான சங்கம்

South Asian Association for Regional Co-operation (SAARC)

தெற்காசிய நாடுகள் எட்டினது பொருளாதார மற்றும் அரசியல் சார்பான செயற்பாடுகள் தொடர்பில் கவனஞ்செலுத்துவதற்காக 1985 December 8ம் திகதி இவ் அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது

SAARC அமைப்பின் பிரதான செயற்பாடுகள்/ மேற்கொள்ளப்படும் பிரதான துறைகள்



SAARC அமைப்பு நாடுகள்



தொகுப்பு : திருமதி அம்பிகை தர்ஷினி நஞ்சன், ஆசிரிய ஆலோசகர் - வணிகக்கல்வி (மாகாண கல்வித் திணைக்களம், வடமாகாணம்)

கணினி வடிவமைப்பு : திரு.க.குகதாசன் ஆசிரியர் - த.தொ.தொ (கிளி/புனித பற்றிமா றோ.க.த.க பாடசாலை, உருத்திரபுரம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

ஆசிய அபிவிருத்தி வங்கி

Asian Development Bank (ADB)

அங்கத்துவ நாடுகளுக்கு கடன்களை வழங்கி அந் நாடுகளின் வறுமையினை நீக்குவதற்காக ஆசிய வலய நாடுகள், 48உம், பசுபிக் வலய நாடுகள் 19உம் மொத்தமாக 67 நாடுகள் இணைந்து 1966 ஆம் ஆண்டு டிசெம்பர் 19ம் திகதி ஆரம்பிக்கப்பட்ட அமைப்பு இதுவாகும். இதன் தலைமையகம் பிலிப்பைன்ஸின் மணிலா நகரில் அமைந்துள்ளது.

இதன் பிரதான நோக்கம் அங்கத்துவ நாடுகளின் சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தியினை மேம்படுத்துவதாகும்.

மறுசீரமைப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பான சர்வதேச வங்கி (உலக வங்கி)

International Bank for Reconstruction and Development (IBRD)

இரண்டாம் உலக யுத்தத்தின் காரணமாக அழிவுற்ற ஐரோப்பாவின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்காகவும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் வறுமையினைக் குறைக்கும் நோக்கில் பிரிட்டன் வூட்ஸ் (Bretton Woods) ஒப்பந்தத்தினூடாக 1945 டிசெம்பர் 27 இல் ஆரம்பிக்கப்பட்ட அமைப்பு இதுவாகும்.

மறுசீரமைப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பான சர்வதேச வங்கியின் செயற்பாடு

- அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு கடன் வழங்குதல்

பிரதான இலக்கு

⇒ வளமான எழுச்சிக்காக கருமமாற்றுதல்

⇒ வறுமையினைக் குறைத்தல்

சர்வதேச நாணய நிதியம்

நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கும், செலாவணி விகிதம், கொடுப்பனவு மீதிகள் என்பவற்றை மேற்பார்வை செய்வதற்காக உருவாக்கப்பட்ட அமைப்பு இதுவாகும். இதன் தலைமையகம் ஐக்கிய அமெரிக்காவின் வாசிங்டன் நகரில் அமைந்துள்ளது.

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

தொகுப்பு : திருமதி அம்பிகை தர்ஷினி றஞ்சன், ஆசிரிய ஆலோசகர் - வணிகக்கல்வி (மாகாண கல்வித் திணைக்களம், வடமாகாணம்)

கணினி வடிவமைப்பு : திரு.க.குகதாசன் ஆசிரியர் - த.தொ.தொ (கிளி/புனித பற்றிமா றோ.க.த.க பாடசாலை, உருத்திரபுரம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



சர்வதேச நாணய நிதியத்தின் பிரதான நோக்கங்கள்

⇒ உலக நாடுகளின் நிதி ஒத்துழைப்பினை மேம்படுத்துதல்

⇒ சர்வதேச வியாபாரத்திற்கான வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல்

⇒ வேலை வாய்ப்புக்களை விரிவுபடுத்துதல்

⇒ வளமான பொருளாதார அபிவிருத்தி

⇒ வறுமையினைக் குறைத்தல்

⇒ நிதி உறுதித் தன்மையினை உறுதிப்படுத்தல்

வியாபாரச் சங்கங்கள், வியாபார ஒப்பந்தங்கள், சர்வதேச அமைப்புக்கள் என்பன வெளிநாட்டு வியாபாரத்தில் ஏற்படுத்தும் தாக்கங்கள்

1. சுதந்திரமான வியாபாரத்திற்கு எதிராக சுங்கவரி மற்றும் சுங்கவரி அல்லாத தடைகள் நீங்குதல்
2. நாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்பு மேம்படுதல்
3. வியாபார ஒப்பந்தங்களினூடாக தமது நாடுகளின் உற்பத்திகளுக்கு நிலையான சந்தையொன்று கிடைக்கப்பெறுதல்
4. நிலையான விலையொன்று கிடைப்பதால் விலை ஏற்ற இறக்கங்களினால் ஏற்படக்கூடிய பிரதிகூலங்கள் குறைவடைதல்
5. அங்கத்துவ நாடுகள் சகலவற்றிற்க்கும் சமமான உரிமைகள் கிடைத்தல்
6. பூகோள ரீதியான நிதி ஒத்துழைப்பு அதிகரித்தலும் நிதி உறுதித் தன்மையினை உறுதிப்படுத்தலும்
7. வேலைவாய்ப்புக்கள் விரிவடைதலும் வளமான பொருளாதார அபிவிருத்தியும் வறுமை குறைவடைதலும்

Copyright www.e-thaksalawa.moe.gov.lk

தொகுப்பு : திருமதி அம்பிகை தர்ஷினி நஞ்சன், ஆசிரிய ஆலோசகர் - வணிகக்கல்வி (மாகாண கல்வித் திணைக்களம், வடமாகாணம்)

கணினி வடிவமைப்பு : திரு.க.குகதாசன் ஆசிரியர் - த.தொ.தொ (கிளி/புனித பற்றிமா றோ.க.த.க பாடசாலை, உருத்திரபுரம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

வெளிநாட்டு வியாபாரத்தின் நவீன போக்குகள்

⇒ இலத்திரனியல் வணிகத்தின் மூலம் வெளிநாட்டு வியாபாரம் உலகம் முழுவதும் விரி-வடைந்தமை

⇒ பொருளாதார அபிவிருத்தியினை துரிதப்படுத்துவதற்க்கும் பொருளாதார பிரச்சினைகளுக்குச் சிறப்பாக முகம் கொடுப்பதற்கும் புதிய வியாபார வலையமைப்புக்கள் மற்றும் வியாபாரக் கூட்டுக்கள் உருவாதல்

⇒ பாரம்பரிய ஏற்றுமதிகளில் மட்டும் தங்கியிராது உயர் தொழில்நுட்பத்துடன் கூடிய உற்பத்திகளைப் பயன்படுத்துதல் தொடர்பில் கவனம் செலுத்துதல்

⇒ அதிகூடிய பெறுமதிகளுடனான உற்பத்திகளை ஊக்குவிப்பதற்காக வெளிநாட்டு வியாபாரக் கொள்கைகளில் ஈடுபடல்

⇒ இலங்கையில் ஏற்றுமதிப் பண்டம் பொதி தொடர்பில் நிகழ்காலத்தில் கவனம் செலுத்தப்படல்

ஒப்படை

சர்வதேச வியாபாரச் சங்கங்கள், வியாபார ஒப்பந்தங்கள், அமைப்புக்கள் தொடர்பான தகவல்கள் தரப்படுகிறது

- சங்கங்கள் (EU, ASEAN, G8)
- ஒப்பந்தங்கள் (NAFTA, SAFTA, APTA)
- அமைப்புக்கள் (WTO, IBRD, IMF)

மேற்குறிப்பிட்டுள்ள சங்கம்/ ஒப்பந்தம்/ அமைப்பு தொடர்பில் பின்வரும் தலைப்புக்களின் கீழ் தகவல்களை பட்டியற்படுத்தவும்

1. முழுமையான பெயர்
2. ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு
3. அங்கத்துவ நாடுகள்
4. நோக்கங்களும் கருமங்களும்
5. வெளிநாட்டு வியாபார மேம்பாட்டில் ஏற்படுத்தும் தாக்கம்

தொகுப்பு : திருமதி அம்பிகை தர்ஷினி நஞ்சன், ஆசிரிய ஆலோசகர் - வணிகக்கல்வி (மாகாண கல்வித் திணைக்களம், வடமாகாணம்)

கணினி வடிவமைப்பு : திரு.க.குகதாசன் ஆசிரியர் - த.தொ.தொ (கிளி/புனித பற்றிமா றோ.க.த.க பாடசாலை, உருத்திரபுரம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk





சர்வதேச வியாபாரத்திற்க்கு பங்களிப்புச் செய்யும் வியாபாரச் சங்கங்கள், வியாபார ஒப்பந்தங்கள், சர்வதேச அமைப்புக்கள் என்பவற்றிற்கான உதாரணங்களை உள்ளடக்கிய அட்டவணை ஒன்றினை தயாரிக்குக

.....

.....

.....

.....

.....

.....

.....

.....

.....

.....



.....

.....

.....

.....

.....

.....

.....

.....

© www.e-thaksalawa.moe.gov.lk

தொகுப்பு : திருமதி அம்பிகை தர்ஷினி நஞ்சன், ஆசிரிய ஆலோசகர் - வணிகக்கல்வி (மாகாண கல்வித் திணைக்களம், வடமாகாணம்)

கணினி வடிவமைப்பு : திரு.க.குகதாசன் ஆசிரியர் - த.தொ.தொ (கிளி/புனித பற்றிமா றோ.க.த.க பாடசாலை, உருத்திரபுரம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



வியாபாரச் சங்கங்கள், வியாபார ஒப்பந்தங்கள், சர்வதேச அமைப்புக்கள் என்பன வெளிநாட்டு வியாபாரத்தில் ஏற்படுத்தும் தாக்கத்தை பகுப்பாய்வு செய்க

.....

.....

.....

.....

.....

.....

.....

.....

.....

.....

.....

.....

.....

.....

.....

.....



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

தொகுப்பு : திருமதி அம்பிகை தர்ஷினி நஞ்சன், ஆசிரிய ஆலோசகர் - வணிகக்கல்வி (மாகாண கல்வித் திணைக்களம், வடமாகாணம்)

கணினி வடிவமைப்பு : திரு.க.குகதாசன் ஆசிரியர் - த.தொ.தொ (கிளி/புனித பற்றிமா றோ.க.த.க பாடசாலை, உருத்திரபுரம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk





வெளிநாட்டு வியாபாரத்தின் போக்குகளை ஆராய்க



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

தொகுப்பு : திருமதி அம்பிகை தர்ஷினி றஞ்சன், ஆசிரிய ஆலோசகர் - வணிகக்கல்வி (மாகாண கல்வித் திணைக்களம், வடமாகாணம்)

கணினி வடிவமைப்பு : திரு.க.குகதாசன் ஆசிரியர் - த.தொ.தொ (கிளி/புனித பற்றிமா றோ.க.த.க பாடசாலை, உருத்திரபுரம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

பயிற்சிகள்

கட்டமைப்பு வினா

1. வியாபார வலயங்களுக்கு உதாரணம் தருக
2. பின்வரும் வியாபார வலயங்களுக்கு சிறு குறிப்பு எழுதுக
   * ஐரோப்பிய சங்கம் (European Union)
   * தென் கிழக்காசிய நாடுகளின் சங்கம் (ASEAN)
3. இரு நாடுகள் அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகள் குறிப்பிட்ட காலப்பகுதியொன்றினுள் வியாபாரம் தொடர்பாக பரிமாற்றிக் கொள்வதற்கு ஏற்படுத்திக் கொள்ளும் வியாபார ஒப்பந்தங்களின் வகைகளை குறிப்பிடுக
4. சர்வதேச வியாபார ஒப்பந்தங்களுக்கு உதாரணம் தருக
5. பின்வரும் வியாபார ஒப்பந்தங்களுக்கு சிறுகுறிப்பு தருக
   * வட அமெரிக்க சுதந்திர வியாபார ஒப்பந்தம்
   * தெற்காசிய சுதந்திர வியாபார வலயம்
6. ஆசிய பசுபிக் வியாபார ஒப்பந்தத்தின் அங்கத்துவ நாடுகளைக் குறிப்பிடுக
7. சர்வதேச அமைப்புகளுக்கு உதாரணம் தருக
8. உலக வியாபார அமைப்பின் பிரதான இலக்குகள்/ நோக்கங்களைக் குறிப்பிடுக
9. SAARC அமைப்பின் பிரதான செயற்பாடுகள்/ மேற்கொள்ளப்படும் பிரதான துறைகளினைக் குறிப்பிடுக
10. மறு சீரமைப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பான சர்வதேச வங்கியின் பிரதான இலக்கு யாது?
11. சர்வதேச நாணய நிதியத்தின் பிரதான நோக்கங்களைக் குறிப்பிடுக
12. வியாபார சங்கங்கள், வியாபார ஒப்பந்தங்கள், சர்வதேச அமைப்புக்கள் என்பன வெளிநாட்டு வியாபாரத்தில் ஏற்படுத்தும் தாக்கங்களைக் குறிப்பிடுக
13. வெளிநாட்டு வியாபாரத்தின் நவீன போக்குகளைக் குறிப்பிடுக.



தொகுப்பு : திருமதி அம்பிகை தர்ஷினி றஞ்சன், ஆசிரிய ஆலோசகர் - வணிகக்கல்வி (மாகாண கல்வித் திணைக்களம், வடமாகாணம்)

கணினி வடிவமைப்பு : திரு.க.குகதாசன் ஆசிரியர் - த.தொ.தொ (கிளி/புனித பற்றிமா றோ.க.த.க பாடசாலை, உருத்திரபுரம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk